



# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி






மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 22, 2023 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 39


# புதுதில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்தின் (எய்ம்ஸ்) 48 வது பட்டமளிப்பு விழாவில் குடியரசு துணைத் தலைவர் நிகழ்த்திய உரை

புதுதில்லி, ஆகஸ்ட் 22, 2023: அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்!

மத்திய சுகாதாரம், குடும்ப நலன், ரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சரும் எய்ம்ஸ் மருத்துவமனையின் தலைவருமான டாக்டர் மன்சுக் மாண்டவியா அவர்களே, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் பேராசிரியர் எஸ்.பி.சிங் பாகெல் அவர்களே, எய்ம்ஸ் இயக்குநர் பேராசிரியர் எம். ஸ்ரீனிவாஸ் அவர்களே, அர்ப்பணிப்பு மிக்க எய்ம்ஸ் மருத்துவமனை மருத்துவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே,

மூன்று ஆண்டுகளுக்குப் பின் இங்குப் பட்டமளிப்பு விழா நடைபெறுகிறது. இந்த இடைவெளி கொவிட் தொற்றுநோயை நமக்கு நினைவூட்டுகிறது. உலகமும், குறிப்பாக மனித குலத்தின் ஆறில் ஒரு பகுதியினரின் தாயகமான இந்தியாவும் அதை எவ்வாறு வெற்றிகரமாக எதிர்கொண்டது, கட்டுப்படுத்தியது என்பதை இந்த இடைப்பட்ட காலம் விவரிக்கிறது. இது முதன்மையாக சுகாதார வீரர்களின் கடின முயற்சியால் ஏற்பட்டது, நீங்கள் அனைவரும் அந்த வகையைச் சேர்ந்தவர்கள். மாண்புமிகு பிரதமரின் தொலைநோக்குப் பார்வை, அவரது புதுமையான உத்திகள், தடையற்ற செயலாக்கம் ஆகியவை முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்களின் பங்களிப்பை உறுதி செய்தன.

வாழ்நாள் சாதனையாளர் விருதுகளைப் பெற்றுள்ள இந்நிறுவனத்துடன் தொடர்புடைய ஆறு ஆசிரிய உறுப்பினர்களுக்கு எனது வாழ்த்துகள், அவர்களின் வருகை ஒரு நேரடித் தொடர்பை உருவாக்கும், உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் போற்றும் ஆற்றலையும் வலிமையையும் உங்களுக்கு வழங்கும்.

இன்று பட்டம் பெறும் அனைத்து இளைஞர்களும் வாழ்நாள் சாதனையாளர்களின் சுயவிவரத்தைப் படிக்கவும், அவர்களைப் பின்பற்றிச் செல்லவும், அவர்கள் செய்த




அர்ப்பணிப்பு, அவர்கள் நமக்காக கொண்டு வந்த முடிவுகள், அவர்கள் எப்படி, ஏன் இந்த நிலைக்கு வர முடிந்தது என்பதையும் அறியுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். தன் சொந்த நிறுவனத்தாலும், தன் சகாக்களாலும் கௌரவிக்கப்படுவதை விட, வாழ்க்கையில் பெரிய சாதனை எதுவும் இருக்க முடியாது.

இது ஒவ்வொரு பெற்றோருக்கும் பெருமையான தருணமாகும், ஏனெனில் எய்ம்ஸ் என்ற குறியீட்டுச்சொல் மிக உயர்ந்த மதிப்பைக் கொண்டுள்ளது. இங்கு எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., எம்.டி., டி.எம்., எம்.சி.எச்., பி.எச்.டி., பெறுபவர்களுக்கு வாழ்த்துகள். நீங்கள் நாடு முழுவதும் பரவும்போது, தரமான சுகாதாரம் மற்றும் மக்களுக்கு நலவாழ்வின் மையமாக நீங்கள் மாறுவீர்கள். ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சியும் அதன் மக்களின் ஆரோக்கியத்துடன் தொடர்புடையது. மக்கள் ஆரோக்கியமாக இல்லை என்றால், சாதனைகள் அதிகரிப்பது ஒருபுறம் இருக்கட்டும், உங்களால் சாதனைகள் செய்ய முடியாது. 'ஆரோக்கியமே செல்வம்',

எய்ம்ஸ் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றும் அனைவருக்கும், பேராசிரியர்கள், துணை மருத்துவ பணியாளர்கள் மற்றும் பிற ஊழியர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தில்லி, கரக்பூர் ஐ.ஐ.டி மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பல முன்னணி நிறுவனங்களுடன் கூட்டாண்மையை உருவாக்கி எய்ம்ஸ் ஒரு சிறந்த சூழலை உருவாக்கியுள்ளது என்பது மகிழ்ச்சியளிக்கிறது. சிந்தனை, கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி, மேம்பாடு ஆகிய திறமைகளை ஒருங்கிணைக்க வேண்டிய காலகட்டம் இது, இதன் மூலம் அனைவரும் பயனடைவார்கள், பெரிய தீர்வுகள் கிடைக்கும்.

நடுத்தர வர்க்கம் மற்றும் கீழ் நடுத்தர வர்க்கத்தின் பொருளாதாரம் வளர்கிறது, ஏனெனில் ஆயுஷ்மான் பாரத் அவர்களின் ஆரோக்கியத்திற்கு முழு உத்தரவாதம் அளிக்கிறது. நான் வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் இந்தியா உலகின் மருந்தகம் என்று மக்கள் கூறுவதைக் காண்கிறேன். அந்த திறமை, அந்த மனித வளம் நம்மிடம் உள்ளது, ஆனால் சாமானிய மக்களுக்கு மருத்துவம் கிடைக்க நாம் இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும். இது சேவை அம்சத்தை உள்ளடக்க வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளில் மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கையில் உண்மையான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது திருப்தியளிக்கும் விஷயம். எம்.பி.பி.எஸ்., எம்.டி., படிப்பில் மாணவர் சேர்க்கையை அதிகரித்துள்ளோம். நாம் அதை இன்னும் பெரிய உயரத்திற்கு கொண்டு செல்ல வேண்டும், அது நடந்தவுடன், நமது சுகாதார வீரர்களின் தாக்கத்தை உலகம் முழுவதும் உணரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஒரு நோயாளியின் நலனுக்காகத் தனது சொந்த ஆரோக்கியத்தைத் தியாகம் செய்யும் மருத்துவர்கள் இந்த பூமியில், குறிப்பாக நம் நாட்டில் எப்போதும் இருக்கிறார்கள். நோயாளியைக் காப்பாற்ற அவர் தனது இதயத்தையும் ஆன்மாவையும் கொடுப்பார். நீங்கள் ஈடுபடப் போகும் அத்தகைய சேவைக்குப் பெரிய வணக்கம்.

நிறைவாக, கொவிட் தொற்றுநோயை வெற்றிகரமாகக் கடக்க உதவிய நமது மருத்துவர்கள் மற்றும் சுகாதார வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதில் இந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள கோடிக் கணக்கானவர்களுடன் நானும் இணைகிறேன். இன்று பட்டமளிப்பு விழாவிற்கு வந்துள்ள அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், ஆசிரியர்களின் கடின உழைப்புக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் தேசத்தை எப்போதும் முதன்மையாக வைத்திருங்கள். இது விருப்பமில்லை, இது கட்டாயமில்லை, இதுதான் ஒரே வழி. உங்கள் தேசத்தை எப்போதும் முதலிடத்தில் வைத்திருக்க வேண்டும்.

# அஞ்சல் தலை சேகரிப்பை ஊக்குவிக்க செயல்படுத்தப்படும் உதவித்தொகைத் திட்டத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்பு




புதுதில்லி, ஆகஸ்ட் 22, 2023: தீன் தயாள் ஸ்பர்ஷ் யோஜனா என்ற திட்டத்தின் கீழ், அஞ்சல் தலை சேகரிப்பை ஊக்குவிக்கும் வகையில் உதவித்தொகைத் திட்டத்தை அஞ்சல் துறை 2017-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டில் இத்திட்டத்தில் பயன் பெற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் இத்திட்டத்தில் பங்கேற்று விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு ரூ.6000/- உதவித்தொகை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர் இந்தியாவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் ஆறு முதல் ஒன்பதாம் வகுப்புக்குள் படிக்கும் மாணவராக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பள்ளியில் அஞ்சல் தலை சேகரிப்பு சங்கம் இருக்க வேண்டும். அதில் சம்பந்தப்பட்ட மாணவர் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- தேர்வு நடைமுறையானது, அஞ்சல் தலை சேகரிப்புத் தொடர்பான வினாடி வினா மற்றும் அஞ்சல் தலை சேகரிப்புத் தொடர்பான திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் என 2 நிலைகளில் நடைபெறும். இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி 08.09.2023.


மேலும் விபரங்களுக்கு, அஞ்சல் தலை சேகரிப்புப் பிரிவு, அண்ணா சாலை தலைமை தபால் நிலையம், சென்னை என்ற முகவரியையோ அல்லது 044-28543199 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல் முகவரி: ணீஸீஸீணீகூஷ்ஷீணீபீலீஷ்-பீஷீ ஜீ@ஸீவீநீ.வீஸீ இந்தத் தகவலை சென்னை அண்ணாசாலை, தலைமை அஞ்சலகத்தின் அஞ்சல்துறை தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.





"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# பல்கலைக்கழக மானியக்குழு பரிந்துரைக்கும் பாடத்-திட்டத்தையே கல்லூரிகள் நடத்தலாம்- கவர்னர் ஆர்.என்.ரவி அறிவிப்பு



சென்னை, ஆகஸ்ட் 22, 2023: பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவை பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு (யு.ஜி.சி.) கட்டுப்பட்டவையாகும். தமிழக அரசின் உயர் கல்வித்துறை கொண்டு வரும் பொது பாடத்திட்டத்தை அமல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. மேலும் படிக்க சென்னை: தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் மாநில அரசின் பொது பாடத்திட்டத்தை அமல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என கவர்னர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார். தமிழக அரசின் பொது பாடத்திட்டத்தை தன்னாட்சிக் கல்லூரிகளிலும் அமல்படுத்துவது தொடர்பாக தன்னாட்சி அங்கீகாரம் பெற்ற கல்லூரி முதல்வர்களுடன் உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அண்மையில் ஆலோசனை நடத்தினார். அந்தக் கூட்டத்தில் ஒரு சில கல்லூரிகளின் முதல்வர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பில், பொது பாடத்திட்டத்தை அமல்படுத்துவது குறித்து தன்னாட்சிக் கல்லூரிகள் தங்கள் விருப்பத்துக்கேற்ப முடிவு செய்துக் கொள்ளலாம் எனத் தெரிவித்தது. இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், கல்லூரி முதல்வர்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி விடுத்துள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:- தமிழக அரசின் உயர் கல்வித்துறையானது கலை, அறிவியல் கல்லூரிகள் அனைத்து பொது பாடத்திட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்று வலிந்து நிர்ப்பந்திப்பது தொடர்பாக பல்வேறு கல்வியாளர்கள், பல்கலைக்கழக துணை வேந்தர்கள், கல்லூரி முதல்வர்கள், தன்னாட்சிக் கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தினர் தங்கள் கவலையை எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். அதாவது, மாநில அரசின் பொது பாடத்திட்டம் கொண்டு வரப்படும்போது கல்விச் சுதந்திரம் பாதிக்கப்படும். இது கல்வியின் தரத்தைக் குறைக்கும். தேசிய அளவில் தரவரிசைப் பட்டியலில் இடம்பெறுவதும் பாதிப்புக்குள்ளாகும். மேலும், அகில இந்திய அளவில் ஆரோக்கியமான போட்டிச் சூழலுடன், கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் இடம் பெறுவதையும் இது பாதிக்கும். இதுபோன்ற நியாயமான கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டுள்ள நிலையில், உயர் கல்வி என்பது மாநில அரசின் வரம்புக்கு அப்பாற்பட்டு மத்திய அரசின் பொதுப்பட்டியலில் உள்ளது. அதாவது, கல்லூரிகளின் பாடத்திட்டத்தைக் கண்காணிக்கும் அமைப்பாக பல்கலைக்கழக மானியக் குழுவே உள்ளது. இதற்காக பாராளுமன்றத்தில் சட்டமும் இயற்றப்பட்டு யு.ஜி.சி.க்கு உரிய அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவை பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு (யு.ஜி.சி.) கட்டுப்பட்டவையாகும். அதன் ஆளுமைக்கு உட்பட்டே பாடத்திட்டங்கள் வரையறுக்கப்படுகின்றன. குறித்த கால இடைவெளியில் பாடத்திட்டங்கள் தொடர்பாக கல்வி கவுன்சில் மற்றும் நிர்வாக கவுன்சில் ஒப்புதல் பெற்று முடிவெடுக்கும் அதிகாரம் படைத்ததாக யு.ஜி.சி.யே உள்ளது. எனவே, தமிழக அரசின் பொது பாடத்திட்டம் என்பது எந்த யு.ஜி.சி.யின் வரம்புக்குட்பட்டது இல்லை. எனவே, கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தன்னாட்சிக் கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரைக்கும் பாடத்திட்டத்திலேயே பாடங்களை நடத்தலாம். தமிழக அரசின் உயர் கல்வித்துறை கொண்டு வரும் பொது பாடத்திட்டத்தை அமல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பதவி கோப்பை திருப்பி அனுப்பிய கவர்னர் சைலேந்திர பாபு இணைய வழி விளையாட்டு ஆணையத்தின் தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களின் நியமனத்திற்கு ஒப்புதல்



சென்னை, ஆகஸ்ட் 22, 2023: டி.என்.பி.எஸ்.சி. எனப்படும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தமிழ்நாட்டின் அரசுத் துறைகளுக்கு தேவையான ஊழியர்களை போட்டி தேர்வு நடத்தி நியமனம் செய்து வருகிறது. இந்த தேர்வாணையம் தலைவர் மற்றும் 14 உறுப்பினர்களை கொண்ட ஒரு அமைப்பாகும். அரசு அலுவலகங்களில் உள்ள ஒவ்வொரு பணிகளுக்கும் தேர்வுகள் நடத்தப்பட்டு ஆட்களை தேர்வு செய்வது டி.என்.பி.எஸ்.சி.யின் முக்கிய பணியாகும். இந்த அமைப்புக்கு தலைவர் பதவி நியமிக்கப்படாமல் காலியாக உள்ளது. மிக முக்கியத்துவம் வாய்ந்த டி.என்.பி.எஸ்.சி. யில் 4 உறுப்பினர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். இந்த உறுப்பினர்களில் ஒருவரான முனியநாதன் (ஐ.ஏ.எஸ். ஒய்வு) டி.என்.பி.எஸ்.சி. பொறுப்பு தலைவராக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில் ஓய்வுபெற்ற போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திர பாபுவுக்கு டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பதவி வழங்க தமிழக அரசு முடிவு செய்தது. இதையொட்டி தலைவர் பதவிக்கு சைலேந்திரபாபு பெயரையும், 8 உறுப்பினர் பதவிகளுக்கு தகுதியான நபர்களின் பெயர்களையும் தமிழக அரசு பரிந்துரை செய்து கவர்னருக்கு கோப்புகளை அனுப்பியது. தமிழக அரசு அனுப்பி வைத்த இந்த பரிந்துரையை ஏற்றுக்கொள்ளாத கவர்னர் ஆர்.என்.ரவி, இந்த கோப்பில் கையெழுத்திடாமல் கடந்த 1 மாதமாக கிடப்பில் வைத்திருந்தார். இப்போது சைலேந்திர பாபு தொடர்பாக சில விளக்கங்களை கேட்டு தமிழக அரசுக்கு கோப்பை திருப்பி அனுப்பி இருக்கிறார். டி.என்.பி.எஸ்.சி. தலைவர் நியமனத்தில் சுப்ரீம் கோர்ட்டு வழிகாட்டுதல்கள் எதுவும் பின்பற்றப்படவில்லை என்றும், பிரகாஷ் சிங் என்பவரது வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு வழங்கிய வழிகாட்டுதல்களின் படி இந்த நியமனம் இல்லை என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார். டி.ஜி.பி.யாக இருந்தபோது சைலேந்திர பாபு ஓய்வுபெற்ற தேதியை பொருட்படுத்தாமல் டி.ஜி.பி.யாக 2 ஆண்டுகள் பதவி வகித்ததால் கடந்த ஜூன் 30-ந்தேதி தனது 61-வது வயதில் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். ஆனால் இப்போது நியமிக்கப்படும் டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பதவி காலம் 6 ஆண்டுகள் என்றாலும், அதிகபட்ச வயது வரம்பு 62 ஆகும். இதை சுட்டிக்காட்டி உள்ள கவர்னர் ஆர்.என்.ரவி, சைலேந்திரபாபு நியமனத்தில் சுப்ரீம் கோர்ட்டின் வழிகாட்டுதல்கள் எதுவும் பின்பற்றப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இந்த நியமனத்தில் பின்பற்றப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்களை தனக்கு முழுமையாக தெரிவிக்க வேண்டும் என்றும் கூறி உள்ளார். இந்த நியமனம் தொடர்பாக அறிவிப்புகள் வெளிப்படையாக விளம்பரம் செய்யப்பட்டதா? என்றும் அரசுக்கு கவர்னர் கேள்வி எழுப்பி உள்ளார். இந்த நியமனத்தில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். எனவே இது தொடர்பான விவரங்களை விளக்கமாக தமக்கு தெரிவிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிட்டுள்ளார். இந்த பதவிகளுக்கான நியமனத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் எவ்வாறு இறுதி செய்யப்பட்டனர் என்பதையும் விளக்குமாறு கவர்னர் ஆர்.என்.ரவி பல்வேறு கேள்விகளை எழுப்பி தமிழக அரசுக்கு திருப்பி அனுப்பி வைத்துள்ளார். இந்த விவகாரம் அரசுக்கும், கவர்னருக்கும் மீண்டும் மோதல் போக்கை உருவாக்கி உள்ளது. கவர்னர் குறிப்பிட்டுள்ள விளக்கங்களுக்கு தமிழக அரசு விரிவாக பதில் தயாரித்து வருவதாகவும். விரைவில் அந்த கோப்பு முழு விளக்கங்களுடன் கவர்னருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் தமிழ்நாடு இணைய வழி சூதாட்ட தடை மற்றும் இணையவழி விளையாட்டு கட்டுப்பாட்டு சட்டம் 2022-ன் கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு இணைய வழி விளையாட்டு ஆணையத்தின் தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களின் நியமனத்திற்கு கவர்னர் ஒப்புதல் வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# எர்ணாகுளம்-வேளாங்கண்ணி சிறப்பு ரெயிலில் தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில் ரெயில் நிறுத்தங்களை உடனே அறிவிக்க வேண்டும்



சென்னை, ஆகஸ்ட் 22, 2023: தென்காசி சந்திப்பு ரெயில் நிலையம் நெல்லை-கொல்லம், விருதுநகர்-கொல்லம் ரெயில் வழித்தடத்தில் அமைந்துள்ள மிக முக்கியமான சந்திப்பு ரெயில் நிலையம் ஆகும். கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் இருந்து செங்கோட்டை, தென்காசி வழியாக நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணிக்கு வாரந்தோறும் 2 முறை சிறப்பு ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது அந்த ரெயில் மற்றும் மதுரை-குருவாயூர் தினசரி எக்ஸ்பிரஸ், பாலக்காடு-நெல்லை இடையேயான பாலருவி எக்ஸ்பிரஸ் ரெயில் தூத்துக்குடி வரை நீட்டிப்பு என 3 ரெயில்களுக்கு ரெயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் அதில் எர்ணாகுளம்-வேளாங்கண்ணி ரெயிலுக்கு தென்காசியில் நிறுத்தம் கிடையாது என்ற அறிவிப்பு தென்காசி மாவட்ட மக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து ரெயில்வே வாரியம் அளித்துள்ள ஒப்புதலின்படி, எர்ணாகுளம்-வேளாங்கண்ணி வாரம் இருமுறை ரெயில் திங்கள் மற்றும் சனிக்கிழமைகளில் மதியம் 12.35 மணிக்கு புறப்பட்டு இரவு 8 மணிக்கு செங்கோட்டை வந்து மறுநாள் காலை 5.50 மணிக்கு வேளாங்கண்ணியை சென்றடையும். மறுமார்க்கத்தில் வேளாங்கண்ணியில் இருந்து செவ்வாய் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 4.15 மணிக்கு செங்கோட்டை வந்து மதியம் 12 மணிக்கு எர்ணாகுளத்தை சென்றடையும். இந்த ரெயில் கோட்டயம், சங்கனாச்சேரி, திருவல்லா, செங்கனூர், காயங்குளம், கொல்லம், கொட்டாரக்கரை, புனலூர், செங்கோட்டை, ராஜபாளையம், சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, காரைக்குடி, அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நாகப்பட்டினம் நிறுத்தங்களில் நின்று செல்லும் என்று அறிவித்துள்ளது. இந்த புதிய ரெயில் சேவை அடுத்த மாதம் 25-ந்தேதி முதல் எர்ணாகுளத்தில் இருந்தும், 26-ந்தேதி முதல் வேளாங்கண்ணியில் இருந்தும் தனது இயக்கத்தை தொடங்குகிறது. இந்த சிறப்பு ரெயில்கள் தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில் ரெயில் நிலையங்களில் தற்போது நின்று சென்று கொண்டிருக்கும் நிலையில் நிரந்தர ரெயிலாக இயங்க இருக்கும் நிலையில், தென்காசி நிறுத்தம் நீக்கப்பட்டுள்ளது பயணிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து தென்காசி மாவட்ட ரெயில் பயணிகள் சங்கத்தினர் கூறுகையில், மதுரை ரெயில்வே கோட்டத்தில் தென்காசி ரெயில் நிலையம் ரூ.20 கோடிக்கு மேல் வருமானம் கொடுத்து 8-வது இடத்தை அடைந்துள்ளது. மேலும் பயன்பாட்டில் 24 லட்சம் பயணிகளுடன் 5-வது இடத்தை பிடித்துள்ளது. தென்காசி சந்திப்பு ரெயில் நிலையம் நெல்லை-கொல்லம், விருதுநகர்-கொல்லம் ரெயில் வழித்தடத்தில் அமைந்துள்ள மிக முக்கியமான சந்திப்பு ரெயில் நிலையம் ஆகும். கடந்த முறை எர்ணாகுளம்-வேளாங்கண்ணி சிறப்பு ரெயில் தென்காசியில் நிற்காது என்று அறிவித்த தெற்கு ரெயில்வே பயணிகளின் போராட்டத்தை தொடர்ந்து மீண்டும் வழங்கியது. எனவே தென்காசி ரெயில் நிறுத்தம் வழங்காவிட்டால் பயணிகள் அனைவரும் போராட்டம் நடத்துவோம். எனவே தெற்கு ரெயில்வே உடனடியாக தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில் ரெயில் நிறுத்தங்களை உடனே அறிவிக்க வேண்டும் என்றனர்.

# கோத்ரேஜ் கன்சூமர் ப்ராடக்ட்ஸ், தமிழ்நாட்டில் திரவ டிட்டர்ஜெண்ட் பிரிவில் தீவிரமான வளர்ச்சியை இலக்காகக் கொண்டு, திரவ டிட்டர்ஜெண்ட் பிராண்ட் ஆன ஜென்டீல் ஐ மீண்டும் அறிமுகப்படுத்துகிறது




சென்னை, ஆகஸ்ட் 22, 2023: கோத்ரேஜ் கன்சூமர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட், தமிழ்நாட்டில் ஜென்டீல் திரவ சோப்பு பிராண்டை மீண்டும் அறிமுகப்படுத்துவதன் மூலம், மாநிலத்திற்குள் வளர்ந்து வரும் திரவ சோப்பு சந்தையில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கைக் கைப்பற்றும் நோக்கத்தில் ஒரு மூலோபாய நகர்வை மேற்கொண்டுள்ளது. ஜென்டீல் ஆனது நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, ஒரு மேம்படுத்தப்பட்ட உருவாக்கம் மற்றும் தயாரிப்பு வடிவமைப்புடன் இந்த நிறுவனத்தால் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சிறந்த செயல்திறன் மற்றும் ஒரு மேம்பட்ட உணர்வு அனுபவத்தை வழங்க ஜென்டீல் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. தமிழ்நாடு மாநிலத்திற்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட ஒரு பெரிய டிவிசி பிரச்சாரத்தால் இந்த மறுவெளியீடு ஆதரிக்கப்படுகிறது.

சோப்பு வகைக்குள் ஒரு குறிப்பிடத்தக்க எழுச்சியின் மத்தியில், இந்திய திரவ சோப்பு சந்தை சமீபத்திய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க எழுச்சிக்கு உட்பட்டுள்ளது. தற்போது, தமிழ்நாட்டில் திரவ சோப்புகளுக்கான சந்தை அளவு ஒரு கணிசமான ரூ. 380 கோடியாக உள்ளது, இது ஒட்டுமொத்த தென்னிந்திய வகையின் ரூ. 900 கோடி மதிப்பீட்டிற்கு பங்களிக்கிறது. தமிழ்நாட்டிற்குள் 58% மற்றும் பரந்த தென் பிராந்தியத்தில் 60% என்ற ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சி விகிதத்துடன், இந்த விரிவடைந்து வரும் திரவ சோப்பு சந்தையானது நாடு முழுவதும் நிலவும் போக்கை உருவகப்படுத்துகிறது.

ஜென்டீல், மாநிலத்திற்குள் திரவ சோப்பு பிரிவின் விரிவாக்கத்தை தூண்டுவதில் ஒரு முக்கிய ஊக்கியாக உருவாகி வருகிறது. ஒரு முன்னோக்கிச் சிந்திக்கும் மற்றும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் பயன்படுத்தி, ஜென்டீல் தமிழ்நாட்டின் நுகர்வோரின் எப்போதும் மாறிவரும் தேவைகளை திறம்பட பூர்த்தி செய்துள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், இந்த பிராண்டின் தாக்கத்தை ஏற்படுத்தும் சந்தைப்படுத்தல் முயற்சிகள், ஒரு வலுவான பிராண்ட் அடையாளத்தை வளர்ப்பதிலும், தமிழ்நாட்டின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள வாடிக்கையாளர்களுடன் ஆழமான வேரூன்றிய உறவுகளை வளர்ப்பதிலும் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த செயல்திறம் மிக்க சாதனைப் பதிவை மூலதனமாக கொண்டு, ஜிசிபிஎல் இப்போது, தமிழ்நாட்டில் ஜென்டீல் பிராண்டிற்கான ஒரு தீவிரமான வளர்ச்சியில் அதன் பார்வையை அமைக்கிறது. ஒரு ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மூலோபாயத்தின் மூலம், ஜிசிபிஎல் ஆனது ஜென்டீல் இன் சந்தை இருப்பை மேலும் வலுப்படுத்துவதையும், மாநிலத்தில் திரவ சோப்பு சந்தையில் ஒரு முன்னணி வீரராக தனது நிலையை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கோத்ரேஜ் கன்சூமர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் ஹோம் கேர் பிரிவுத் தலைவர் சேகர் சௌரப், தமிழ்நாட்டில் ஜென்டீல் இன் மறு அறிமுகம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், “ஜெண்டீல் ஐ ஒரு மறுசீரமைக்கப்பட்ட தயாரிப்பு மற்றும் புதுப்பிக்கப்பட்ட பேக்கேஜிங்குடன் மீண்டும் அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் தற்போதைய நுகர்வோர் தேவைகளுக்கு ஏற்ப ஒரு தரமான தயாரிப்பை உருவாக்குவதில் எங்கள் கவனம் இருந்தது. ஜென்டீல் இன் இந்த மேம்படுத்தப்பட்ட ஃபார்முலா முழுமையான சுத்திகரிப்பு மூலம் ஆடைகளை புதியது போல் பிரகாசிக்கச் செய்கிறது. அவர் மேலும் கூறினார், "ஜென்டீல் இன் மறுசீரமைப்பு மற்றும் புதிய டிவிசி பிரச்சாரம் நுகர்வோரிடம் எவ்வாறு எதிரொலிக்கிறது என்பதைப் பார்க்க நாங்கள் ஆவலாக இருக்கிறோம்."

கூடுதலாக, ஜென்டீல் சமீபத்தில் தமிழ்நாடு சந்தைக்காக உருவாக்கிய தனது முதல் தொலைக்காட்சி பிரச்சாரத்தை வெளியிட்டது. இந்த டிவிசி ஆடைகளில் கடுமையாக இல்லாமல், கறைகளை நேர்த்தியாக நீக்கி, புத்தம் புதியது போல் ஜொலிக்க வைக்கும் ஜென்டீல் இன் திறனை எடுத்துக்காட்டுகிறது. அதன் தனித்துவமான உருவாக்கம் ஆடைகளின் பளபளப்பு, வலிமை மற்றும் நிறம் ஆகியவற்றைப் பாதுகாக்கிறது, இதன் மூலம் அவற்றின் ஆயுட்காலம் நீட்டிக்கப்படுகிறது மற்றும் அவற்றின் பிரகாசத்தை ஒரு புதியது போல நிலைக்கு மீட்டெடுக்கிறது. கூடுதலாக, ஜென்டீல், துவைத்த பிறகு 21 நாட்கள் வரை ஆடைகள் ஒரு புதிய மற்றும் புத்துணர்ச்சியூட்டும் வாசனையைப் பராமரிப்பதை உறுதிசெய்யும் குறிப்பிடத்தக்க 3-வார நறுமண பிடிப்பு அம்சத்தை உள்ளடக்கியது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஆஹா ஓடிடியில் 'டெய்லி சீரிஸ்' வரிசையில் வெளியாகி ஆறு எபிசோடுகளிலேயே 15 மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளைப் கடந்து "வேற மாறி ஆபிஸ்" தொடர் சாதனை




சென்னை, ஆகஸ்ட் 2023: ஆஹா ஓடிடி இணையதளத்தில் 'டெய்லி சீரிஸ்' வரிசையில் வெளியாகி இருக்கும் தொடர் "வேற மாறி ஆபிஸ்". ஆறு எபிசோடுகள் வெளியான நிலையில் வெற்றிகரமாக பதினைந்து மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளை இந்த தொடர் பெற்றிருக்கிறது. இதைக் கொண்டாடும் வகையிலும் இன்னும் அதிகமான மக்களுக்கு இந்தத் தொடரை கொண்டு சேர்க்கும் வகையிலும் சென்னை வடபழனியில் உள்ள நெக்சஸ் விஜயா மாலில் ஒரு நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் 'வேற மாறி ஆபிஸ்"-ன் நட்சத்திரங்களான விஷ்ணு விஜய், ஆர்.ஜே.விஜய், விக்கல்ஸ் விக்ரம், வி.ஜே.பார்வதி, ஷியாமா, லாவண்யா, வி.ஜே.பப்பு, சவுந்தர்யா நஞ்சுண்டன், கண்ணதாசன், சஞ்சீவ் ஆகியோருடன் இத்தொடரின் இயக்குநரான சிதம்பரம் மணிவண்ணன் மற்றும் தயாரிப்பாளர் சிவகாந்த் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆஹா ஓடிடி இணையதளத்தின் தலைமை நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் கவிதா ஜெளபின் பேசும் போது, "இந்த நிகழ்விற்கு வந்திருக்கும் அனைத்து பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களுக்கு வணக்கங்களும் நன்றிகளும். ஆஹா ஓடிடி இணைய தளத்தில் "வேற மாறி ஆபிஸ்" புதிய தொடரை தொடங்கி வைப்பது மிகுந்த பெருமை அளிக்கும் விஷயமாகும். வேற மாறி ஆபிஸ் என்கின்ற தலைப்பில் உள்ள "வேற மாறி"-க்கும் ஆஹா ஓடிடி க்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்த ஓடிடி தளத்தை தொடங்கும் போது வித்தியாசமான கதைக்களங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்கின்ற எண்ணத்துடன் தான் இதைத் துவங்கினோம். பேட்டைக்காளி, இரத்தசாட்சி இப்படி ஆஹாவில் வெளியான எல்லாத் தொடருமே வித்தியாசமான கதைக்களம் கொண்டது. அந்த வரிசையில் "வேற மாறி ஆபிஸ்" தொடரின் ஒன்லைன் கேட்கும் போதே அது புதியதாகவும் ஜனரஞ்சகமானதாகவும் இருக்கும் என்று தோன்றியது. மேலும் இந்தக் கதைக் களத்தை எடுக்கும் போது தற்போது நிலவும் வேலை இழப்பு பிரச்சனைகள், ஸ்டார்ட் அப் கம்பெனிகளின் வளர்ச்சி போன்ற சமகாலப் பிரச்சனைகளையும் கதைக்குள் கொண்டு வரமுடியும் என்று நம்பிக்கை இருந்தது. டீசரில் வரும் காட்சியைப் போல் வேலை செய்யும் இடத்தை சில்ரன்ஸ் பார்க் ஆகவும் அடுத்த நொடியே ஜூராசிக் பார்க்-ஆகவும் பார்த்த அனுபவங்கள் நம் எல்லோருக்குமே இருக்கும். அதனால் இந்த வேற மாறி ஆபிஸ்- உங்கள் அனைவருக்குமே பிடிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆஹா ஓடிடி இது போன்ற தனித்துவமிக்க கதைகளை உங்களுக்கு வழங்க காத்துக் கொண்டிருக்கிறது. எனவே ஆஹா ஓடிடி ரீயின் பயனாளர்களாக எல்லோரும் மாறுங்கள். "வேற மாறி ஆபிஸ்"க்கு கொடுத்த அதே ஆதரவை எங்கள் தளத்தில் வெளியாகும் எல்லாத் தொடர்களுக்கும் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி. என்று பேசினார்.

அவரைத் தொடர்ந்து ஆஹா ஓடிடி தளத்தின் மார்க்கெட்டிங் துறையைச் சேர்ந்த கிரிஷ் பேசும் போது, "பொதுவாக ஒரு தொடர் வெற்றி பெற்றப் பின்னர் தான் அதற்கான வெற்றி விழா கொண்டாட்ட நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கம். ஆனால் இந்த "வேற மாறி ஆபிஸ்" ஆறு எபிசோடுகள் மட்டுமே வெளியான நிலையிலேயே 15 மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளைப் பெற்றிருக்கிறது. எனவே இந்தத் தொடரை இன்னும் அதிகமான மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்கின்ற எண்ணத்தில் தான் இந்த நிகழ்வை சற்று முன்கூட்டியே நடத்துகிறோம். மார்க்கெட்டிங் துறையில் இருக்கும் எங்களுக்கு இது போன்ற ஆர்ட்டிஸ்டுகள் கிடைக்கும் பொழுது எங்களது வேலை இலகுவாகிவிடும். ஏனென்றால் இவர்கள் அனைவருமே தமிழ்நாட்டில் இருக்கும் பெரும்பாலான மக்களுக்கு தெரிந்த ஆர்.ஜே-க்கள், விஜே-க்கள், மற்றும் சீரியல் நடிகை நடிகைகள். இதனால் மக்களிடையே "வேற மாதிரி ஆபிஸ்"க்கு கிடைத்திருக்கும் வீச்சி அளப்பரியது' என்றார்.

நடிகர் கண்ணதாசன் பேசும் போது, இது எனக்கு முதல் மேடை. எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்த இயக்குநர் சிதம்பரம் சார், தயாரிப்பாளர் சிவகாந்த் சார், கவிதா மேடம் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். "வேற மாறி ஆபிஸ்" ஒரு கலகலப்பான தொடர். நீங்கள் அனைவருமே கண்டிப்பாக பார்க்க வேண்டிய தொடர். அது உங்களை கண்டிப்பாக மகிழ்வூட்டும். என் கதாபாத்திரத்திற்கு ஒரு காதல் கதை இருக்கிறது. அந்த காதல் மிகவும் அழகாக இருக்கும். அனைவரும் இந்த தொடருக்கு ஆதரவு அளியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று பேசினார்.

அவரைத் தொடந்து ஆதித்ய வர்மா, தர்பார் போன்ற படங்களில் நடித்த செளந்தர்யா நஞ்சுண்டன் பேசும் போது, "எனக்கு மேடை பயம் மிக அதிகம். அதனால் என்னால் நிறைய பேச முடியாது. எனக்கு வாய்ப்பு அளித்த அனைவருக்கும் நன்றிகள். ஆடியன்ஸ் அனைவருக்குமே "வேற மாறி ஆபிஸ்" தொடர் மிகவும் பிடிக்கும் என்று நம்புகிறேன். உங்களால் ஏதாவது ஒரு கதாபாத்திரத்துடன் கண்டிப்பாக உங்களை தொடர்புபடுத்திக் கொள்ள முடியும். என் கதாபாத்திரம் உர்ரென்று இருக்கும் கதாபாத்திரம். பெண்களுடன் நான் பேசவேமாட்டேன். எப்பொழுதும் பசங்களுடன் மட்டுமே பேசுவேன். ஆனால் உண்மையில் நான் அதற்கு நேர்மாறானவள். என் கதாபாத்திரம் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் என்று நம்புகிறேன்." என்று பேசினார்.

நடிகை சியாமா அவர்கள் பேசும் போது, இந்தத் தொடரில் நான் சியாமா கதாபாத்திரத்தில் தான் நடித்திருக்கிறேன். கிட்டதட்ட நான் எப்படியோ அதையே தான் என் கதாபாத்திரமாகவும் வடிவமைத்திருக்கிறார்கள். அனைவருக்கும் நன்றி. என்று பேசினார்.

ஸ்டேண்ட் அப் காமெடியனும் நடிகருமான விக்கல்ஸ் விக்ரம் பேசும் போது, நாங்கள் பேசுவதை இத்தனை பேர் கேட்கிறார்கள் என்பதே சந்தோசமாக இருக்கிறது. எங்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாக கட்டி இழுத்துக் கொண்டு செல்லும் பெரும் பணியை செய்வது இயக்குநர் அணி தான். நான் அவர்களுக்கு முதலில் நன்றி சொல்லிக் கொள்கிறேன். அது போல் என் மீது நம்பிக்கை வைத்து வாய்ப்பு கொடுத்த இயக்குநர், தயாரிப்பாளர், ஆஹா ஓடிடி -யின் நிர்வாகத்தினர் அனைவருக்கும் நன்றி. "வேற மாறி ஆபிஸ்" தொடரில் நடித்ததினால் பல நடிப்பு சார்ந்த நுணுக்கங்களை நான் ஒவ்வொருவரிடம் இருந்தும் கற்றுக் கொண்டேன். வி.ஜே.விஜய், வி.ஜே பப்பு போன்றோருக்கு நன்றி. ஸ்டேண்டப் காமெடி செய்வதற்கும், நாடகங்களில் காமெடி செய்வதற்கும், ஆங்கரிங் செய்யும் போது காமெடி செய்வதற்கும் உள்ள வித்தியாசங்களை என்னால் உணர முடிகிறது. எங்களை ஊக்குவிக்கும் படி செயலாற்றும் இசைப்புயல் ஏ.ஆர் ரஹ்மான் சாருக்கு என் நன்றிகள்" என்று பேசினார்.

சின்னத்திரை நடிகையான லாவண்யா பேசும் போது, வேற மாறி ஆபிஸ்" தொடரில் என் கதாபாத்திரத்தின் பெயர் "ரம்யா" நீங்கள் லாவண்யாவைப் பார்த்தால் ரம்யாவைப் பார்க்க வேண்டாம். ரம்யாவைப் பார்த்தால் லாவண்யாவைப் பார்க்க வேண்டாம். எனக்கே என்ன இது நம் கேரக்டரையே நடிக்கச் சொல்கிறார்களே என்று ஆச்சரியமாக இருந்தது. படப்பிடிப்பு தளம் மிகவும் ஜாலியாக சந்தோசமாக இருக்கும். என் ஸ்டோரிஸ் பார்ப்பவர்களுக்கு அது ஏற்கனவே தெரிந்திருக்கும். இந்த தொடருக்கு உங்கள் ஆதரவை தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று பேசினார்.

வி.ஜே. பப்பு பேசும் போது, "வேற மாறி ஆபிஸ்" தொடர் ஒவ்வொரு வாரமும் வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் ஒளிபரப்பாகிறது. மறக்காமல் இந்த தொடரைப் பார்த்து ஆதரவு அளியுங்கள். ஆஹா ஓடிடி தளத்தை சஃப்ஸ்க்ரைப் செய்து கொள்ளுங்கள். ஒரு படைப்பின் வீச்சு என்பது எப்படி இருக்க வேண்டும் என்றால், அது நாமாக தேடிப் போய் வேண்டுகோள் வைப்பதாக இருக்கக் கூடாது. அது தான் உண்மையான வீச்சு. அந்த வெற்றியை "வேற மாறி ஆபிஸ்" தொடர் பெற்றிருக்கிறது. ஏனென்றால் நான் திருச்சிற்றம்பலம் படத்தின் ஓராண்டு வெற்றியை கொண்டாடும் நிகழ்விற்குப் போயிருந்தேன் அப்பொழுது அவர்கள் உங்களைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். எனக்குப் புரியவில்லை. பின்னர் தான் "வேற மாறி ஆபிஸ்" தொடரின் இரண்டாம் எபிசோடை அவர்கள் பார்த்துக் கொண்டு இருந்தார்கள் என்பது எனக்குப் புரிந்தது. இதுவே அதன் வெற்றி. மேலும் இந்திய அளவில் எந்த தொடரிலும் இல்லாத புதுமையாக இத்தொடரில் 50 எபிசோடுகள் நாங்கள் எடுக்க இருக்கிறோம். இதுவும் ஒரு சாதனை தான். "வேற மாறி ஆபிஸ்" தொடர் பார்ட் 1, 2,3 என்று சென்று கொண்டே இருக்க வேண்டும். அதில் நாங்களே நடிக்க வேண்டும். இனி படப்பிடிப்பு வெளிநாடுகளில் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.." என்று பேசினார்.

ஆர்.ஜே. சரித்திரன் பேசும் போது, என் கதாபாத்திரம் ஒரு சிடுமுஞ்சி ஹெச்.ஆர் கதாபாத்திரம். எப்பொழுதும் வடை போச்சே என்று நான் தான் பிற கதாபாத்திரங்களை கலாய்த்துக் கொண்டிருப்பேன். ஆனால் இந்த "வேற மாறி ஆபிஸ்" தொடரில் எல்லோரும் என்னை கலாய்ப்பார்கள். எவருக்குமே என்னைப் பிடிக்காது. அப்படிப்பட்ட ஒரு கதாபாத்திரம். இன்றைய காலச்சூழலில் பணிச்சுமை எவ்வளவு அழுத்தத்தைக் கொடுக்கிறது என்பதும் இக்கதையில் இருக்கிறது. அனைவரும் இந்தத் தொடரைப் பார்த்து ஆதரவு தாருங்கள். நான் அடிமட்ட நிலையில் இருந்து பல தடைகளை அவமானங்களை கடந்து இந்த இடத்திற்கு வந்தவன். அதனால் உண்மையாகவே நான் ஹெச்.ஆர் என்னும் பதவியில் இருந்தால் கூட நான் அனுபவித்த கொடுமைகளை இன்னொருவருக்கு செய்ய மாட்டேன். அதுதான் மனிதம் என்று கருதுகிறேன்" என்று பேசினார்.

சின்னத்திரை நடிகரான விஷ்ணு விஜய் பேசும் போது, இத்தொடரில் நான் "ஜோ" என்னும் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறேன். இந்த ஷாப்பிங் மாலில் எப்படியும் பல "ஜோ" ரீக்கள் இருப்பார்கள் என்று நம்புகிறேன். "ஜோ" எப்பொழுதும் ஜாலியாக ஊர் சுற்றும் ப்ளேபாய் கதாபாத்திரம். ஆனால் அந்த கதாபாத்திரத்தை யாரும் தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். எல்லா பெண்களும் "ஜோ"விடம் தான் பாதுகாப்பாகவும் நட்பாகவும் உணர்வார்கள். அதனால் அவனைச் சுற்றி எப்பொழுதும் பெண்கள் இருந்து கொண்டே இருப்பார்கள். என்னுடன் நடித்த சக நடிகர்களுக்கு அது வயிற்றில் புகைச்சலைக் கொடுத்தது. டைரக்டரிடம் நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்பேன். அவர் ஒன்றும் இல்லை. அங்கு போய் உட்காருங்கள் என்று என்னை அனுப்பிவிட்டு, என்னோடு பேசிக் கொண்டு இருப்பதற்கு நான்கைந்து பெண்களை அனுப்புவார். ஒரு கார்டியன் ஏஞ்சல் கதாபாத்திரம் எனக்கு. ஆனால் ஆர்.ஜே விஜய் நடித்த கதாபாத்திரம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. "வேற மாறி ஆபிஸ்" தொடர் கண்டிப்பாக உங்களை ஏமாற்றாது. உங்கள் நேரத்தை வீணாக்காது. கண்டிப்பாக இக்கதையில் வரும் ஏதாவது ஒரு கதாபாத்திரத்துடன் உங்கள் குணாதிசயம் ஒத்துப் போகும். இந்தத் தொடரைப் பார்த்து ஆதரவு கொடுங்கள். ஆஹா ஓடிடி இணையதளத்தின் சந்தாதாரர் ஆகுங்கள் என்று பேசினார்.

'எமர்ஜென்ஸி', 'வல்லமை தாராயோ' 'கனா காணும் காலங்கள்' போன்ற வெப் தொடர்களின் இயக்குநரும் "வேற மாறி ஆபிஸ்" தொடரின் இயக்குநருமான சிதம்பரம் மணிவண்ணன் பேசும் போது, ஆஹா ஓடிடி இணையதள நிர்வாகிகளுக்கும், என்னோடு இணைந்து பணியாற்றிய தொழில்நுட்பக் கலைஞர்களான ஒளிப்பதிவாளர் சத்யா, கலை இயக்குநர் வாசுதேவன், இசையமைப்பாளர் சரண் ராகவன், எடிட்டர் சித்தார்த்தா ரவீந்திரநாத், காஸ்டியூம் டிசைனர் சிமோனா எழுத்தாளர் சத்யா சரவணன் என அனைவருக்கும் மிக்க நன்றி. இந்த மேடை பலருக்கும் முதல் மேடை. நான் இதற்கு முன் மூன்று வெப் தொடர்கள் இயக்கி இருந்தாலும் இது போல் ஒரு விழா மேடை இதுவே முதல் முறை, இந்த வெஃப் தொடரைப் பாருங்கள். உங்களுக்குப் பிடித்திருந்தால் பொதுமக்களிடம் கொண்டு போய் சேருங்கள். உங்களால் தான் அது முடியும். தொடரில் நடித்த அனைவருமே பிஸி ஆர்டிஸ்ட். வி.ஜே, ஆர்.ஜே, ஸ்டேண்ட் அப் காமெடியன்கள், சீரியல் நடிகர் நடிகைகள் அனைவரையும் ஒன்றிணைப்பது பெரும் சவாலாக இருந்தது. ஆனால் என் உதவி இயக்குநர்கள் சூர்யா, விஜய் ரத்னம், பூர்ணசந்திரன் மற்றும் மேலாளர் வீர சங்கிலி அவர்களும் சிறப்பாக பணியாற்றி என் வேலைப் பளுவை பெரிதும் குறைத்து உதவினார்கள். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி" என்று பேசினார்.

இசையமைப்பாளர் சரண் ராகவன் பேசும் போது, நான் இதற்கு முன்பு நவம்பர் ஸ்டோரிஸ் ரீக்கு இசையமைத்திருந்தேன். இப்பொழுது "வேற மாறி ஆபிஸ்" -க்கு இசையமைத்திருக்கிறேன். எனக்கும் இதுதான் முதல் மேடை. இந்த வெஃப் தொடர் அனைவருக்கும் பிடிக்கும் என்று நம்புகிறேன். ஒருவித ஜாலியான இசைக் கோர்வையை இத்தொடருக்கு இசைத்திருக்கிறேன்; தொடருக்கு நல்ல ஆதரவை கொடுங்கள். எல்லோருக்கும் நன்றி" என்று பேசினார்.

நடிகரும், எழுத்தாளரும், இயக்குநரும் "வேற மாறி ஆபிஸ்" தொடரின் தயாரிப்பாளரும் ஆன சிவகாந்த் பேசும் போது, "கனா காணும் காலங்கள்" சீரியல் முதற்கொண்டு நான் இயக்கத்தில் இருக்கிறேன். ஆனால் இந்தத் தொடரை நான் தயாரிக்க முன்வந்த போது என்னை ஆதரிக்க ஆள் இல்லை. நீ இயக்கினால் நாங்கள் தயாரிக்கிறோம் என்று சொன்னார்கள், ஆனால் நான் தயாரிக்கும் போது யாரும் சப்போர்ட் செய்யவில்லை. கவிதா மேடம் தான் என் மேல் நம்பிக்கை வைத்து இந்தத் தொடரை தயாரிக்க உதவி புரிந்தார். அது போல் ஒளிப்பதிவாளர் சத்யா, எடிட்டர் சித்தார்த்தா ரவீந்திரநாத், எழுத்தாளர்கள் சத்யா சரவணன் போன்றோர் எனக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தார்கள். இது ஒரு ப்ரெண்ட் ப்ராஜட். ஏனென்றால் இது முழுக்க முழுக்க நண்பர்களின் ஆதரவில் உருவானது தான். எனக்கும் இதுதான் முதல் மேடை. தயாரிப்பு என்பது குருவி தலையில் பனங்காய் வைத்த கதை தான். இத்தனை ஆர்டிஸ்டுகளை ஒருங்கிணைப்பதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடும். கலை இயக்குநர் வாசு அவர்கள் எங்களுக்கு ஆபிஸ் போன்ற ஒரு அற்புதமான செட்டை உருவாக்கிக் கொடுத்தார். அவருக்கு மிகப்பெரிய நன்றி. கதாபாத்திர தேர்வில் முதலில் நாங்கள் தேர்வு செய்தது "நி ஷு ணீ கூஷீ பீ வீ ணீ ஸீ கி ஸீ ரீ மீ றி" ஆன விஷ்ணுவைத் தான். ஏனென்றால் அவர் கனா காணும் காலங்கள் காலத்தில் இருந்தே தொடர்பில் இருப்பவர். பின்னர் ஒவ்வொருவராக உள்ளே வந்தார்கள். நாங்கள் மிகுந்த சிரமங்களுக்கு இடையில் தான் இந்த வெஃப் தொடரை உருவாக்கி இருக்கிறோம். "வேற மாறி ஆபிஸ்"-க்கு பின்னால் வேற மாதிரியான பல கதைகள் இருக்கின்றன. இதற்கு நீங்கள் ஆதரவு தருவீர்கள் என்று நம்புகிறோம் என்று பேசினார்.

வி.ஜே.பார்வதி பேசும் போது, எங்கள் இயக்குநர் சிதம்பரம் அவர்களுக்கு என் முதற்கண் நன்றி. ஏனென்றால் நான் நன்றாகப் பேசுவேன் என்று எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு நடிக்க கொஞ்சமாவது வரும் என்பதை எனக்குப் புரிய வைத்தவர் இயக்குநர் சிதம்பரம் தான். அவருக்கு முதல் நன்றி. இரண்டாம் நன்றி தயரிப்பாளர் சிவகாந்த் மற்றும் ஆஹா ஓடிடி தளத்திற்கு. இப்படி ஒரு வாய்ப்பை எனக்குக் கொடுத்த உங்களுக்கு மனமார்ந்த நன்றி. "வேற மாறி ஆபிஸ்" வெஃப் தொடரை பார்த்து ஆதரவு தாருங்கள்" என்று பேசினார்.

ஆர்.ஜே. மிர்ச்சி விஜய் பேசும் போது, எங்கள் அணியே மிகவும் கற்பனை நயம் வாய்ந்த அணி. வந்தவுடனே நான் பேசிவிடுகிறேன் என்று கூறினேன். இல்லை கடைசியாகப் பேசு என்று பாதி பேர் கிளம்பிச் சென்று இருக்கைகள் காலியானப் பின்னர் என்னை பேச அழைத்திருக்கிறார்கள். படப்பிடிப்பு தளத்தில் என்னோடு நடித்த சக நடிகர்கள் எப்படி நடித்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இங்கு மேடையில் எல்லாரும் சிறப்பாக நடிக்கிறார்கள். என்னை தேர்வு செய்யும் போது நீங்கள் தான் முக்கியமான கதாபாத்திரம், உங்களை வைத்துத் தான் மொத்த கதையும் நகர்கிறது என்று சொன்னார்கள். விக்கல் விக்ரம் என்னிடம் வந்து இதே டயலாக்கை கூறினான். அப்பொழுது தான் எல்லோரையும் ஒரே டயலாக் பேசி ஓகே செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தது. இந்த தொடரில் நடித்ததன் மூலம் எனக்கு நல்ல நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். எங்கள் இயக்குநர் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர், அவருக்கு நன்றி. நண்பரும் தயாரிப்பாளருமான சிவகாந்த் அவர்களுக்கும் ஆஹா ஓடிடி தளத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் அனைவருக்கும் நன்றி. நானும் ஐ.டி துறையில் சில ஆண்டுகள் வேலை செய்தவன் என்பதால் இந்தக் கதையை என் வாழ்வோடு பொருத்திப் பார்க்க முடிந்தது. நீங்களும் பாருங்கள். உங்களுக்கும் பிடிக்கும். ஆதரவு தாருங்கள். " என்று பேசினார்.

# பெரியார் சொன்ன பெண் விடுதலை தான் திராவிட மாடல் அரசின் நோக்கம் என்று கூறிய எம்.பி தயாநிதி மாறன் சக்தி மசாலாவின் சுயசக்தி விருதுகள், பெண்களுக்கு அந்த தன்னம்பிக்கை அளித்துள்ளது என்று பாராட்டி உள்ளார்




சென்னை, ஆகஸ்ட் 22, 2023: சென்னை, சேத்துபட்டில் உள்ள லேடி ஆண்டாள் அரங்கத்தில் சக்திமசாலாவின் 6 வது சுயசக்தி விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் இல்லத்தில் இருந்தபடியே தொழில்துறையில் சாதனை படைத்த பெண்கள் கௌரவிக்கப்பட்டனர். பிராண்ட் அவதாரின் முன்முயற்சியான சக்திமசாலா சுயசக்தி விருதுகள் - 2023 வீட்டிலிருந்து வணிகத்தைத் தொடர்ந்த எண்ணற்ற பெண்களுக்கு உத்வேகத்தின் கலங்கரை விளக்கமாக இருந்து வருகிறது. 6 வது ஆண்டாக மிகப்பிரமாண்டமாக நடைபெற்ற இந்த விருது விழாவில், உத்வேகத்திற்கான சக்தி பெண் விருதுகள் 5 பேருக்கு வழங்கப்பட்டன. சக்தி மசாலா நிறுவனர்களான சாந்தி துரைசாமி மற்றும் பி.சி.துரைசாமி ஆகியோர் 'உணவு மற்றும் பானங்கள்' பிரிவில் சென்னையைச் சேர்ந்த சாந்தாவுக்கு விருது வழங்கினர். சென்னையை சேர்ந்த மருத்துவர் ரேணுகா ராமகிருஷ்ணனுக்கு 'சமூக நலன்' பிரிவிலும், பத்ம ஸ்ரீ மீனாட்சி சித்தரஞ்சன் கலை மற்றும் கலாச்சாரம் பிரிவிலும், பொழுதுபோக்கு பிரிவில் சிறந்த பெண் ஆளுமைக்கான விருது நடிகை ரேவதிக்கும், பாசிட்டிவ் இன்ஃப்ளுயன்சர் பிரிவில் ஸ்ருதி நகுலுக்கும் சக்தி பெண் விருதுகள் வழங்கப்பட்டன.

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் சென்னையைச் சேர்ந்த பிரியங்கா ஹரிஷ்க்கு டிஜிட்டல் ஹோம்பிரீனர் விருதும், கோவையைச் சேர்ந்த எஸ்.ராதாலட்சுமி சதீஷ் குமாருக்கு விவசாயத்திற்கான விருதும் வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில் சிறந்த பெண் ஆளுமைக்கான சக்தி பெண் விருது நடிகை ரேவதிக்கு சுகாசினி மணிரத்தினம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சென்னையை சேர்ந்த ஜி.ஜோசஃபின் ரெஜினா பொன்மணிக்கு "ஹோம் புரொபஷனல்" விருது வழங்கப்பட்டது. கோவையைச் சேர்ந்த காயத்ரிக்கு

அழகு மற்றும் ஆரோக்கியத்துக்கான விருதும், தஞ்சாவூரை சேர்ந்த ஷாநாஸ்க்கு கலை மற்றும் கலாச்சாரத்துக்கான விருதும் வழங்கப்பட்டன. கல்வி மற்றும் இலக்கியம் விருது கோவையைச் சேர்ந்த சிந்துவுக்கும், திருச்சியைச் சேர்ந்த சத்ய கவிதாவுக்கு விவசாயத்திற்கான விருதும் வழங்கப்பட்டன. சமூக நலன் பிரிவில் சென்னையைச் சேர்ந்த ஐஸ்வர்யா சிவக்குமாருக்கும், வெளிநாடு வாழ் இந்தியர் பிரிவில் துபாயைச் சேர்ந்த புவனேஸ்வரி குமரவேலுக்கும், மீடியா மற்றும் எண்டர்டெயின்மெண்ட் பிரிவில் கவுரிசங்கரி சுரேஷ்குமாருக்கும், விளையாட்டு மற்றும் உடற்தகுதி பிரிவில் சேலத்தைச் சேர்ந்த வித்யா நாகநாதனுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. ஹெல்த்கேர் பிரிவில் சென்னையைச் சேர்ந்த வர்தினி, உணவு & பானங்கள் பிரிவில் சென்னையைச் சேர்ந்த கீதா மல்லினேனி ஆகியோர் சுயசக்தி விருதுகளை பெற்றுக்கொண்டனர். தொழில்துறையில் சாதனை படைத்துவரும் இல்லத்தரசிகள் 12,000 க்கும் மேற்பட்டோர் கடந்த 6 ஆண்டுகளில் சக்தி மசாலாவின் சுயசக்தி விருதுகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். விருதுகள் அங்கீகாரம் மற்றும் மானியங்கள் மூலம் 350 க்கும் மேற்பட்ட பெண்களை சக்தி மசாலா அங்கீகரித்து அதிகாரம் அளித்துள்ளது. இந்த விருது விழாவில், நேச்சுரல்ஸ் குமாரவேல், வீணா குமாரவேல், சென்னை மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன், கிருத்திகா ராதாகிருஷ்ணன், சுகாசினி மணிரத்னம், பூர்ணிமா பாக்கியராஜ், நீனா ரெட்டி, ஷைலஜா செட்லூர், சரண்யா ஜெயக்குமார், மீனா சப்ரியா, ஆர் ஜே விக்னேஷ்காந்த், மதன் கார்க்கி, இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் உள்ளிட்ட பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

# லேண்டரை வரவேற்ற சந்திரயான்-2 ஆர்பிட்டர்: மகிழ்ச்சியில் இஸ்ரோ விஞ்ஞானிகள்




சென்னை, ஆகஸ்ட் 22, 2023: நிலவின் தென்பகுதியை ஆய்வு செய்வதற்காக இந்தியா ஏற்கனவே சந்திரயான் 2-ஐ கடந்த 2019-ல் செலுத்தியிருந்தது. அப்போது லேண்டர் வேகமாக நிலவின் மேற்பகுதியில் மோதியதால் தகவல் தொடர்பு கிடைக்காமல், திட்டம் தோல்வியில் முடிந்தது. இந்த நிலையில்தான் தற்போது சந்திரயான் 3-ஐ இந்தியா செலுத்தியுள்ளது. லேண்டர் நாளை மறுதினம் நிலவில் இறங்க இருக்கிறது. இதற்கிடையே சந்திரயான்-2 ஆர்பிட்டர் நிலவை சுற்றிக் கொண்டிருக்கிறது. இந்த ஆர்பிட்டர் சந்திரயான் 3 லேண்டருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இரண்டும் தங்களுக்கிடையே தகவல்களை பரிமாறிக் கொண்டுள்ளது என இஸ்ரோ தெரிவித்துள்ளது. இதனால் லேண்டர் நிலவின் மேற்பகுதியை அடைய, இஸ்ரோவுக்கு கூடுதலா ஒரு வழி கிடைத்துள்ளது.

# இந்தியக் கடற்படை (ஐஎன்), ராயல் ஆஸ்திரேலியக் கடற்படை (ஆர்ஏஎன்), ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படை (ஜேஎம்எஸ்டிஎஃப்), அமெரிக்கக் கடற்படை (யுஎஸ்என்) ஆகியவற்றின் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் பங்கேற்ற மலபார் 23 பயிற்சி நிறைவு



புதுதில்லி, ஆகஸ்ட் 22, 2023: ஆஸ்திரேலியாவின் சிட்னி கிழக்குக் கடற்கரையில் மலபார் பயிற்சியின் 27 வது கட்டம் 2023, ஆகஸ்ட் 21 அன்று நிறைவடைந்தது. இந்தப் பயிற்சியில் இந்தியக் கடற்படை (ஐஎன்), ராயல் ஆஸ்திரேலியக் கடற்படை (ஆர்ஏஎன்), ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படை (ஜேஎம்எஸ்டிஎஃப்), அமெரிக்கக் கடற்படை (யுஎஸ்என்) ஆகியவற்றின் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் பங்கேற்றன. மலபார் 23 பயிற்சி, 2023 ஆகஸ்ட் 11-15 வரை துறைமுகக் கட்டம், 2023 ஆகஸ்ட் 16-21 வரை கடல் கட்டம் என இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. இந்தியக் கடற்படையைப் பிரதிநிதித்துவப்படுத்தி உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ் கொல்கத்தா போர்க்கப்பல், ஐ.என்.எஸ் சஹ்யாத்ரி போர்க்கப்பல், பி 8 ஐ கடல் ரோந்து விமானங்கள் ஆகியவை பங்கேற்றன. ரான் கப்பல்களான எச்.எம்.ஏ.எஸ் சவுல்ஸ் மற்றும் எச்.எம்.ஏ.எஸ் பிரிஸ்பேன், யு.எஸ்.எஸ் ரஃபேல் பெரால்டா, ஜே.எஸ்.ஷிரானுய், நீர்மூழ்கிக் கப்பல்கள், போர் விமானங்கள், கடல் ரோந்து விமானங்கள், கப்பல் மூலம் வரும் ஹெலிகாப்டர்கள் ஆகியவையும் இதில் பங்கேற்றன.

கப்பல்கள் சிட்னி துறைமுகத்தில் இருந்து கடல் பகுதிக்கு புறப்பட்டபோது, விமானங்கள் ஆர்ஏஏஎஃப் அம்பர்லி பிரிஸ்பேனிலிருந்து இயக்கப்பட்டன. அங்கு ஐஎன், ஆர்ஏஏஎஃப் மற்றும் அமெரிக்க பி -8 ஊழியர்கள் சம்பந்தப்பட்ட பி -8 ஐ விமானங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்தப் பயிற்சி நான்கு கடற்படைகளும் ஒருங்கிணைந்த சக்தியாக இணைந்து செயல்படும் திறனை மீண்டும் உறுதிப்படுத்தியது மட்டுமின்றி, கூட்டுப் பயிற்சி மற்றும் பரஸ்பர புரிதல் மூலம் கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய நிலைத்தன்மைக்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டையும் எடுத்துக்காட்டியது.

அனைவருக்கும் அமைதி மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கும் சுதந்திரமான, வெளிப்படையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இந்தோ-பசிபிக்கை உறுதி செய்வதற்கான வலுவான ஒத்துழைப்பு, பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் பங்கேற்கும் நான்கு நாடுகளின் கூட்டுத் திறனை ஐந்து நாட்கள் நடைபெற்ற மலபார் பன்முகப் பயிற்சிகள் தெளிவாக வெளிப்படுத்தின.

# தேசிய சேவையை ஊக்குவித்தவர் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் - அமித்ஷா புகழாரம்



சென்னை, ஆகஸ்ட் 22, 2023: முன்னாள் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் ஐந்தாவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடமான "சதைவ் அடல்" வில் அவருக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மரியாதை செலுத்தினார்.

அமித் ஷா கூறுகையில் வாஜ்பாய் பல தசாப்தங்களாக பாரதிய ஜனதா கட்சியின் முகமாக இருந்தார் மற்றும் மூன்று முறை நாட்டின் பிரதமராக பணியாற்றினார். பாரதிய ஜனதா கட்சியின் நிறுவனர்களில், வாஜ்பாய் எப்போதும் தேச நலனுக்கு முன்னுரிமை அளித்தார். அவர் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் உத்வேகம் அளிப்பவராக இருந்தார். வாஜ்பாய் தேசபக்தி, மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை தேசத்திற்கு சேவை செய்ய தலைமுறையினரை தொடர்ந்து ஊக்குவிக்கும் என்று அமித்ஷா கூறினார்.

2014 ஆம் ஆண்டில், பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்ற பிறகு, டிசம்பர் 25 ஆம் தேதி வாஜ்பாய் பிறந்தநாள் "நல்லாட்சி தினமாக" கொண்டாடப்படும் என்று அறிவித்தார். வாஜ்பாய், ஒரு சிறந்த அரசியல்வாதி, அவர் இந்தியாவின் திறன்களை வெளிக்கொணர்ந்தார் என்று அமித்ஷா உறுதியாக நம்புகிறார்.

வாஜ்பாய் அமைத்த வளர்ச்சி மற்றும் ஆட்சியின் அடித்தளமும், மக்களிடையே அவர் விதைத்த தேசிய உணர்வும் கடந்த 9 ஆண்டுகளாக மோடியின் தலைமையிலும், அமித்ஷாவின் வழிகாட்டுதலிலும் பாஜக அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், முதன்முறையாக, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவர்கள் வாஜ்பாய்-க்கு அஞ்சலி செலுத்த "சதைவ் அடல்" க்கு அழைக்கப்பட்டனர். முன்னாள் பிரதமரின் நினைவிடத்தில் மரியாதை செலுத்துமாறு பாரதிய ஜனதா கட்சி தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்த முதல் நிகழ்வு இதுவாகும்.

# துர்காபூரில் உள்ள மத்திய இயந்திரப் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (சி.எம்.இ.ஆர்.ஐ) உள்நாட்டிலேயே உருவாக்கிய சி.எஸ்.ஐ.ஆர் ப்ரைமா ஈ.டி 11 என்ற முதலாவது மின்-டிராக்டரை அறிமுகம்



புதுதில்லி, ஆகஸ்ட் 22, 2023: துர்காபூரில் உள்ள மத்திய இயந்திரப் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (சி.எம்.இ.ஆர்.ஐ) உள்நாட்டிலேயே உருவாக்கிய சி.எஸ்.ஐ.ஆர் ப்ரைமா ஈ.டி 11 என்ற முதலாவது மின்-டிராக்டரை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் (தனி பொறுப்பு) ; பிரதமர் அலுவலகம், பணியாளர் நலன், பொதுமக்கள் குறைதீர்ப்பு, ஓய்வூதியம், அணுசக்தி மற்றும் விண்வெளித் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அறிமுகம் செய்துவைத்தார். இந்தியப் பொருளாதாரத்தில் வேளாண் ஸ்டார்ட்அப்களின் பங்கினை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார், மேலும் விவசாயத்தில் புதிய மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த அழைப்பு விடுத்தார்.

இ-டிராக்டர், குப்பை மறுசுழற்சி, சொட்டுநீர் பாசனம், மா, தாமரை போன்ற மரபணு வரிசை விவசாயம் உள்ளிட்ட முக்கிய தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்தி, வேளாண் துறையில் அதிக அளவில் புதிய ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் கால் பதித்து வருகின்றன.

"இது இந்தியா தேவையான அளவுக்கு வேகம் காட்டாத ஒரு துறை" என்று கூறிய டாக்டர் ஜிதேந்திர சிங், "இது ஆராயப்படாத பெரிய வளமாகும், இது இந்தியாவுக்கு மட்டுமே பிரத்யேகமானது. எனவே, அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவின் எதிர்காலப் பொருளாதாரத்தில் இந்தப் பாதை மிக முக்கியமான அங்கமாக இருக்கும்".என்றார்.

ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு அழைப்பு விடுத்த டாக்டர் ஜிதேந்திர சிங், சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் நெருக்கமான தொடர்பு மற்றும் சி.எஸ்.ஐ.ஆர் ஆய்வகங்களுக்கும் தொழில்துறைக்கும் இடையிலான பரந்த தொடர்புகளை வலியுறுத்தினார். முதலீட்டை ஊக்குவிப்பதற்காக தனிப் பிரிவை உருவாக்க அமைச்சர் யோசனை தெரிவித்தார்..

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் வேளாண் துறையில் தொழில் தொடங்குவதை எளிதாக்குவதன் மூலம் புதிய வாழ்வாதார வழிமுறைகளை உருவாக்கியுள்ளது என்று டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

இந்தியா வளர்ந்த நாடாக உருவெடுப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதால்,அமிர்த காலத்தில் வேளாண் துறைக்கு ஒரு வரையறுக்கப்பட்ட பங்கு இருக்கும் என்று பிரதமர் மோடி கூறியதை டாக்டர் ஜிதேந்திர சிங் நினைவூட்டினார்.

"அடுத்த 25 ஆண்டுகளில், அரசு வேலைகளுக்கு வெளியே வாழ்வாதார வாய்ப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது, இந்த வேளாண் துறை பொருளாதாரத்தின் ஒரு முக்கியப் பகுதியாக மட்டுமின்றி, இளைஞர்களுக்கான தொழிலின் முக்கிய பகுதியாகவும் இருக்கும்," என்று அவர் கூறினார்.

நிகழ்ச்சியில், டாக்டர் ஜிதேந்திர சிங் சி.எஸ்.ஐ.ஆர்-சி.ஐ.எம்.ஏ.பியின் புத்தகத்தையும், சி.எஸ்.ஐ.ஆர் உருவாக்கிய 75 தொழில்நுட்பங்கள் குறித்த தொகுப்பையும் வெளியிட்டார். மறுசுழற்சி வாகனங்கள் மற்றும் தயாரிப்புகளை உருவாக்கிய சி.எம்.இ.ஆர்.ஐ மீது அமைச்சர் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

சி.எஸ்.ஐ.ஆர்-சி.எம்.இ.ஆர்.ஐ 2023 செப்டம்பர் 11 முதல் 15 வரை "ஒரு வாரம் ஒரு ஆய்வகம்" என்ற கருப்பொருள் அடிப்படையிலான பிரச்சாரத்தை மேற்கொள்ளும் இது, ஆய்வகத்தின் அதிநவீன ஆராய்ச்சி, தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள், நிபுணத்துவம் மற்றும் வசதிகளைப் பல்வேறு பங்குதாரர்களுக்கு காட்சிப்படுத்துகிறது.

# கர்வால் பகுதியில், 6,002 மீட்டர் உயரத்தில் உள்ள தெலு மலைச்சிகரத்திற்கான என்.சி.சி சிறுவர்களின், பயணம் புதுதில்லியிலிருந்து கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது

புதுதில்லி, ஆகஸ்ட் 22, 2023: தேசிய மாணவர் படை (என்.சி.சி) சிறுவர்களின் மலையேற்றப் பயணத்தை இன்று (21.08.2023) புதுதில்லியிலிருந்து என்.சி.சி தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் திரு குர்பிர்பால் சிங் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இக்குழுவில் 5 அலுவலர்கள், 17 நிரந்தர பயிற்றுநர்கள் மற்றும் 26 தேசிய மாணவர் படை மாணவர்கள் (13 மாணவர்கள் மற்றும் 13 மாணவிகள்) இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழு 2023 செப்டம்பர் முதல் வாரத்திற்குள் தெலு சிகரத்தை அடைய முயற்சி மேற்கொள்ளும்.

1970-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் மலையேற்றப் பயணத்தில் இது என்.சி.சி மாணவர்களின் 86-வது மலையேற்றப் பயணமாகும். 6,002 மீட்டர் (19,692 அடி) உயரமுள்ள தெலு சிகரம், உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள கர்வால் இமயமலைப் பகுதியின் கங்கோத்ரி மலைத்தொடரில் அமைந்துள்ளது.

இன்று பயணத்தைத் தொடங்கியுள்ள என்சிசி மாணவர்கள் வெற்றி அடைய வாழ்த்து தெரிவித்த என்.சி.சி தலைமை இயக்குநர், சவால்களை எதிர்கொண்டு தன்னம்பிக்கையுடனும், துணிச்சலுடனும் செயல்படுமாறு அறிவுரை வழங்கினார். இளைஞர்களின் வளர்ச்சியில் என்சிசி முக்கிய பங்காற்றுவதுடன் அவர்கள் சாகச நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏராளமான வாய்ப்புகளையும் வழங்கி வருவதாக என்.சி.சி தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் திரு குர்பிர்பால் சிங் தெரிவித்தார்.

# ஆர்.கே.நகர் பகுதியில் ஏடிஎம் இயந்திரத்தின் பேட்டரிகளை திருடிய 2 நபர்கள் கைது. 3 பேட்டரிகள் மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல்

சென்னை, ஆகஸ்ட் 22, 2023: சென்னை பெருநகர காவல், எச்-6 ஆர்.கே நகர் காவல் நிலைய காவல் குழுவினர், நேற்று (20.08.2023) அன்று மாலை தண்டையார்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலை பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு உள்ள தனியார் வங்கியின் ஏடிஎம்-ல் இருந்து சந்தேகப்படும்படி 2 நபர்கள் பேட்டரியுடன், இருசக்கர வாகனத்தில் செல்ல முற்பட்ட போது, ரோந்து காவலர்கள் மேற்படி 2 நபர்களை மடக்கி பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். எச்-6 ஆர்.கே நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரின் விசாரணையில் பிடிப்பட்ட மேற்படி 2 நபர்களும் சேர்ந்து, மேற்படி எண்ணூர், நெடுஞ்சாலையில் உள்ள தனியார் ஏடிஎம் அருகில் பொருத்தப்பட்டிருந்த 3 பேட்டரிகளை திருடிவிட்டு தப்பிக்க முயன்றது தெரியவந்தது. மேலும் அவர்கள் வந்த இரு சக்கரவாகனம் புதுவண்ணாரப்பேட்டை பகுதியில் திருடியுள்ளதும் தெரியவந்தது.

அதன்பேரில் ஏடிஎம்-ல் இருந்து பேட்டரி திருடிய 1.ரபீக் பாஷா, வ/40, த/பெ.அன்வர்பாஷா, வினோபா நகர், பெங்களூர், கர்நாடகா மாநிலம், 2.சையத் சாபி, வ/30, த/பெ.ஜானு, டாக்டர்.சிவராம கரந்த் நகர், பெங்களூர், கர்நாடகா மாநிலம் ஆகிய இருவர் மீதும், வழக்குப்பதிவு செய்து, கைது செய்து, அவர்களிடமிருந்து 3 பேட்டரிகள் மற்றும் புதுவண்ணாரப்பேட்டை பகுதியில் திருடிய 1 இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட மேற்படி இருவரும் நேற்று (20.08.2023) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.